Reg. No. M.

தனிப்பிரதி 1 அணா

ஆசிரியர் :
யாழ்ப்பாணம்
தென்கோவை.
ச. கந்தையபிள்ளை
தமிழ்ப் பண்டிதர்,
சிலோன்.

REPUBLIQUE FRANÇAISE

Liberté - Egalité - Fraternité

# VITTAGAM

LE DIRECTEUR
TENKOVAI
S. CANDIAH PILLAI
TAMIL PANDIT
JAFFNA
CEYLON.

JOURNAL HEBDOMADAIRE PARAISSANT LE JEUDI

# வித்தகம்

## வியாழக்கிழமை தோறும் வெளிவருவது

நத்தம்போற் கேடு முளதாகுஞ் சாக்காடும்
வித்தகர்க் கல்லா லரிது.— குறள்.

VOL, I. { புதுவை, ஸ்ரீமுக ௵ மார்கழி ௴ ௭ உ (21—12—33) } No. 4

### திருமந்திரம்.

நில்லா நிலையை நிலையாக நெஞ்சத்து
நில்லாக் குரம்பை நிலையென் றுணர்வீர்கா
ளெல்லா வுயிர்க்கு மிறைவனே யாயினுங்
கல்லாதார் நெஞ்சத்துக் காணவொண் ணாதே.

உடம்பா ரழியி லுயிரா ரழிவர்
திடம்பட மெஞ்ஞானஞ் சேரவு மாட்டா
ருடம்பை வளர்க்கு முபாய மறிந்தே
யுடம்பை வளர்த்தே னுயிர்வளர்த் தேனே.

உடம்பினை முன்ன மிழுக்கென் றிருந்தே
னுடம்பினுக் குள்ளே யுறுபொருள் கண்டே
னுடம்புளே யுத்தமன் கோயிற்கொண் டானென்
றுடம்பினை யானிருந் தோம்புகின் றேனே.

உ

திருவருள் துணை.

ம
நந்தி பதி
கோல்

காலமுண்டாகவே காதல்
செய்துய்மின் கருதரிய
ஞாலமுண்டானொடு நான்முகன்
வானவர் நண்ணரிய
ஆலமுண்டானெங்கள் பாண்டிப்
பிரான்தன் னடியவர்க்கு
மூலபண்டாரம் வழங்கு
கின்றான்வந்து முந்துமினே.
(திருவாசகம்.)

# வித்தகம்

புதுவை,
ஸ்ரீமுக மார்கழி மீ 7உ

## எழுதா மறை

இந்து சமயிகள் — சைவ சமயிகள் எனப்படுவோர் எல்லாம் தங்கள் சமய நூல்களை வேதம் எனவும் எழுதாமறை எனவும் கூறுவர். வேதம் கடவுள் வடிவமே எனவும், அநாதி எனவும், கடவுளால் சொல்லப்பட்டது — இயற்றப்பட்டது எனவும் கூறுவர். இக் கூற்றுக்கு அடிப்படையில் உண்மை ஒன்று மறைபொருளாய் இருக்கின்றது. அவ்வுண்மை இது எனக்கண்டு கூறுவதே இக் கட்டுரையின் நோக்கமாகும்.

கடவுள் அநாதி. கடவுளால் சொல்லப்பட்டபடியால் வேதமும் அநாதி. இரண்டு அநாதி எப்படி? ஆதலால் கடவுள்தான் வேதமாதல் வேண்டும். இதனை எவ்வாறு ஏட்டில் எழுதி வைக்க முடியும்? எவ்வாறு படிக்க முடியும்? சீவர்கள் பொருட்டுக் கடவுளால் சொல்லப்பட்ட—இயற்றப்பட்ட வேதம் என்ன முறையிட வேண்டும்? சீவர்கள் எல்லாம் பாசபந்தம் நீங்கி வீடடைதற்கு ஏற்றவாறு அவ்வச் சீவர்களது சடபேதம் கர்ம பேதங்களுக்கு ஏற்ற அளவில்லாத விதிகள் — கட்டங்கள் எல்லாம் அவ் வேதத்தில் எழுதி வைக்கப்பட்டிருத்தல் வேண்டும் அல்லவா? முன்னே முத்தி அடைந்த இருடிகள் முனிவர்களும் மணிவாசகர் மூவர் முதலிய மெய்யடியாரும் ஆழ்வார்களும் பிறரும் இன்ன இன்ன கட்டங்களைத் தழுவி ஒழுகினார்கள் என அவரவர் சடபேதம் கர்ம பேதங்களுக்கு ஏற்ற சாதகயோக விதிகளும், மேல் முத்தியடைய வேண்டிய சீவர்களும் அவ்வாறே இன்ன இன்ன கட்டங்களைத் தழுவி ஒழுக வேண்டும் என அவ்வச் சீவர்களது சடபேதம் கர்ம பேதங்களுக்கு ஏற்ற சாதகயோக விதிகளும் அவ்வேத நூல்களில் எழுதிவைக்கப்பட்டு இருத்தல் வேண்டும் அல்லவா? சம்ஸ்கிருதத்திலும் தான் தமிழிலும் தான் வேத நூல்கள் எனத் தற்காலம் வழங்குவன எவற்றிலாவது இவ் விதிகள் இருக்கின்றனவா? அல்லது முற்காலத்திற்றான் இவ்வாறான நூல்கள் இருந்தனஎன்று கூறமுடியுமா? ஜீவகோடிகள் எத்தனை? பக்குவ பேதம் எத்தனை? சடபேதம் கர்ம பேதம் எத்தனை? இவற்றிற்கு ஏற்ற விதிபேதம் - அறத்தாறுகள் எவ்வளவு? இவற்றையெல்லாம் எவ்வாறு ஏட்டில் எழுதிவைக்க முடியும்? கடவுளாலும் முடியாதா? என்றால் முடியாது என்றுதான் கூற வேண்டும். இதனால் பெறப்படுவது யாது? சீவர்கள் முத்தியடைதற்கேற்ற சாதகயோக விதிகள் அவ்வப் பக்குவ சீவருக்கே அவரவர் சடபேதம் கர்ம பேதங்களுக்கு ஏற்ப முன்னிலையில் குருவடிவாய்ப் போதரும் இறைவனால் அருளப்படும் என்பதேயாம். அமல ஐகாரவிளைவே ஒவ்வொரு சீவருக்கும் வேதாகம விதிகளாய் அமையும். ஆதலால் இவ் விதிகள் உலகில் நூல்களாக வழங்குதல் முடியாத காரியமே யாகும்.

ஒலிவரி வடிவமாகிய பாஷைகள் சிலவற்றில் வழங்கும் நூல்களே எழுதாமறை எனவும், கடவுளால் இயற்றப்பட்டன எனவும் கூறினால் அந்நூல்கள் சகல சீவராசிகளும்கைக்கொண்டு ஒழுகி முத்தியடைதற்குரிய சாதகயோக விதிகளைக் கூறாமல் வேறு எதனைத்தான் கூறவேண்டும்? ஒலிவரி வடிவில் வழங்கும் நூல்களை எழுதாமறை என்பது எப்படி? எழுதாமறை என்றால் என்னை? ஒலிவரிவடிவம் அற்றதாய்—எழுதமுடியாததாய் மறைபொருளாய் இருப்பது அல்லவா? ஒலிவரி வடிவில் அஃதாவது உலகில் வழங்கும் பாஷைகளில் படிக்கப்பட்டும் எழுதப்பட்டும் வழங்கும் நூல்கள் எல்லாம் எழுதப்பட்டனவாயே--எழுதப்படுவனவாயே இருக்கின்றன அல்லவா? எழுத்துவடிவாய் சொல்வடிவாய் வாக்கிய வடிவாய் செய்யுள் வடிவாய் அல்லவா அந்நூல்கள் வழங்குகின்றன? வேதம் எனவும் ஆகமம் எனவும் பிறவுமாக வழங்கும் சமய நூல்கள் எல்லாம் எழுதப்பட்டனவாயே — எழுதப் படுவனவாயே வழங்குதல் கண்கூடு அல்லவா? ஒருகாலத்துப் பரம்பரையாய் ஓதப்பட்டுப் பின் ஒரு காலத்து ஏட்டில் எழுதப்பட்டன என்றாலும், எழுத்துவடிவும் சொல்வடிவும் வாக்கிய வடிவும் செய்யுள் வடிவுமாயே இருந்து வாயால் ஓதப்பட்டு வந்த ஒலிவரிவடிவமான அப் பாஷையை எழுதாமறை என்பது எவ்வாறு பொருந்தும்? ஆதலால் ஒலிவரி வடிவாக உலகில் வழங்கும் வேதநூல்கள் எழுதுமறைகளே என்பது வெள்ளிடை. இவற்றை எழுதாமறை என்பது உபசாரமாகிய போலிக் கூற்றே எனினும், இத்தகைய உபசாரக் கூற்று இல்லாவிடின் உண்மையை எவ்வாறு அறிய முடியும்? போலியா

கிய பொய்ம்மைக்கு ஊடாகவே மெய்ம்மை ஒன்று விளங்குகின்றது அல்லவா? அம் மெய்ம்மைதான் யாது? அதுதான் எழுதாமறை என்பது. எழுதாமறை என்பதுதான் என்னை? கடவுள் வடிவமாகிய வேதம் என்பது, தமிழ் எனவும் சம்ஸ்கிருதம் எனவும் பிறவுமாக வழங்கும் ஒலிவரிவடிவங்களுள் — பாஷைகளுள் எவற்றிலாவது எழுதப்படவும் படிக்கப்படவும் முடியுமா? எனின், சிறிது கூறுதும்.

உலகில் வழங்கும் பாஷைகள் எல்லாம் காரிய ரூபமான ஒலிவரி வடிவமாயே இருக்கின்றன. கடவுள் வடிவம் எனப்படும் எழுதாமறை என்பது காரிய ரூபமான ஒலிவரிவடிவில் இருத்தல் முடியாதகாரியம் — அசம்பாவிதம். ஆதலால் காரியரூபமான— வியாபகமான ஒலிவரிவடிவில் விளங்காதது எதுவோ, இவற்றிற்கெல்லாம் காரணமாய்—மூலமாய் — வியாப்பியமாய்—கௌணமாய் — கௌண ஒலியாய்—ஒலிபீடமாய்—நாதபீடமாய்— நாத அந்தமாகிய வேத அந்தமாய் அநாதியாய் இருப்பது எதுவோ, அசுத்த சரீரமுடைய உலகினரால் ஒரு சிறிதும் அறிய முடியாததாய்— நாத அந்தமாகிய வேத அந்தத்தை அணவிய அமலதநுவுடைய துவிஜராகிய அந்தணரால் — தத்துவப் பெரியாரால் அறியப்படுவதாய் அரிய பெரிய மறையாய் — இரகசியமாய்— அமலநிறையாய் இருப்பது எதுவோ அதுவே எழுதாமறை என அறிதல் வேண்டும். எம்பெருமான் வடிவம் எனவும், அரிய பெரிய மகாரம் எனவும் அந்தணர் மறை எனவும், மோன எழுத்து எனவும், மௌனவித்தை எனவும், மௌன மந்திராதிக்ய வித்தை எனவும், குண்டலி இயக்கம் எனவும், எழுதாக்கிளவி எனவும், ஆரியம் எனவும், வடமொழி எனவும், வடசொல் எனவும் பெரியாரால் புகழ்ந்து போற்றப்பட்ட மாண்பினை உடையதும் இவ் எழுதாமறையே என அறிதல் வேண்டும். அமல ஐகார ஒலி எனப்பட்டதும் இதுவே. நமது இருதய கமலத்தில் ஆரூர் கமல மத்தியில் ஓவாது அசைந்து நிற்பதும் இதுவே. அசையாமல் அசைவதையே — ஒலியாமல் ஒலிப்பதையே — உள்ளுக்கு உள்ளாகச் சுழன்று நிறையோடு ஒலிப்பதையே கௌண இயக்கம் என்றனர் பெரியார். அசைவு ஒலி நடனம் என்பன ஒன்றே. இவ்வியாப்பியத்தில் நின்றும் வியாபகம் பெற்றனவே—நிறை பிரிந்து பஞ்சீகரணித்தனவே ஒலிவரிவடிவமான—அக்கர வடிவம் சொல்வடிவம் வாக்கிய வடிவமான பாஷைகள் என்று அறிதல் வேண்டும். இவ்வரிய பெரிய மகாரத்தில் ஒலி பேதம் எல்லாம் அடங்கியுள்ளன. ஒலி என்பது ஆதியில் மகர ஒத்து (ஒற்று) ஒன்றேயாம். இது "மா" என விரிந்தது "மா எனப் பூத்தது" என்பர் பெரியார். "ம" என் அகரம் தோன்றி அகிலம் தோன்றியது என்க.

அகரமுதல வெழுத் தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு

[தேவர்குறள் கடவுள் வாழ்த்து செ.1.]

என்பது பொய்யா மொழி. பிரணவம் "ஓ" என ஒலித்து "ம்" என லயம் பெறுகின்றது—ஒடுங்குகின்றது. தோன்றிய இடத்திற்றான் ஒடுக்கமும் உள்ளது. இயற்கை முறை இதுவே. மகர அகரங்களால் மற்றைய உயிர்களும் மெய்களும் ஆக்க முற்றனவாகும். விரிப்பிற் பெருகும்; அமயம் நேரும் போது விரித்துக்கூறப்படும். ஒலிகட்கெல்லாம் பிறப்பிடமாகிய நாத பீடத்தை அநுபவமாகக்கண்டுணர்ந்த அந்தணரே எழுத்துக்கள் ஆக்க முற்றவகையை—அவற்றின் பிறப்பைப் பூரணமாக அறிய வல்லவராவர். இது பற்றியன்றோ அறிவான்மிக்க பெரியாராகிய தொல்காப்பியனாரும் "எல்லாவெழுத்தும் வெளிப்படக் கிளந்து...." (தொல்காப்பியம் எழுத்ததிகாரம் பிறப்பியல் சூத். 20.) என்னும் நூற்பாவில், எழுத்துக்களின் பிறப்பிலக்கணத்தைப் பூரணமாய் அறிந்து கூறுதல் தம்மால் முடியாத காரியம் என வெளிப்படையாகக்கூறி, அவ்வுண்மை ஒலிபீடமாகிய எழுதாமறை என்னும் அந்தணர் மறையை அநுபவமாகக் காணுதலாற்றான் அறியப்பட வேண்டும் என உரைப்பாராய் "அந்தணர் மறைத்தே" என அமைவாராயினர். "அந்தணர்மறை" என்றால் என்னை? அது தான் அந்தணரால் அறியப்படும் மறையாகிய எழுதாமறை என்பது.

நமது சரீரமாகிய பூமியுள் - ஆலயத்துள் இருதய கமலத்துள் உள்ளீடாக - கௌணமாக ஒலிக்கும் இம் மகாரமானது வியாப்பியம் எனப்படும். இவ்வியாப்பியத்தில் இருந்து வியாபகம் பெற்றவைகளே பலவித நாதங்களாகிய வேதங்களும் ஒலி வரிவடிவமான பாஷையுமாம். வியாப்பியம் ஆரியம் எனப்படும். வியாபகம் தமிழ் எனப்படும். தமிழ் என்பது ஒலிவரி வடிவமான பாஷைகளுக்குப் பொதுப் பெயராகும். ஆரியமும் தமிழும் காரண காரியமாய் என்றும் உள்ளனவே. இவை ஒருவரால் இயற்றப்பட்டு மற்றொருவருக்கு அளிக்கப்பட்டன ஆகா. "என்றும் உளதென்றமிழ் இயம்பி இசை கொண்டான்" எனக் கம்ப ராமாயணம் கூறியதும் அறிக. ஒலிவரிவடிவமான பாஷைகளுள் ஒன்றாகிய சம்ஸ்கிருதம் என்னும் பாஷையை ஆரியம் என்பது என்னை? எனின், அது காரியத்தைக் காரணமாக உபசரித்துக் கூறுவது போன்ற ஓர் இடுகுறி வழக்கே— உலக சம்பிரதாயமே என அறிதல் வேண்டும். இத்தகைய உபசாரமான கூற்று இல்லாவிடின் உண்மையை எவ்வாறு அறிய முடியும்? இடுகுறி அந்தணர் போற்றும் இடுகுறி ஆரியத்தைக் கொண்டே உண்மை அந்தணர் போற்றும் உண்மை ஆரியத்தை அறிவது எளிதாயிற்று அல்லவா? ஆதலால் கற்பனையாகிய உலகியலே உண்மையை உணர்தற்கு வாயிலாகின்றது என்பது வெள்ளிடை. ஆரியமும் தமிழும் எம்பெருமான் வடிவமே என்பதும் இவற்றின் உண்மையை உணரும் மதிப்பொலிவு உடையார்க்கே எம்பெருமான் குறியாகி நிற்பன்

என்பதும் பின் வரும் அப்பர் திருவாக்கால் நன்கு புலப்படும்.

"ஆரியந் தமிழோ
டிசையா னவன்
கூரிய குணத்தார்
குறி நின்றவன்......"

(திருக்கடம்பந்துறை--திருக்குறுந்தொகை [செ. 3.)

"...... வட மொழியுந் தென்றமிழு
மறைகள் நான்கும்
ஆனவன் காண்......"

(திருச்சிவபுரம் திருத்தாண்டகம் செ. 1.)

சற்குரு நாதனாகிய எம்பெருமான் அருளால் பக்குவ சீவர்கள் அறியும் உண்மைகள் வியாப்பிய வியாபகங்களாகிய ஆரியம் தமிழ் என்னும் இரண்டனுள் அடங்கும் என்பதுபின் வரும் பிரமாணங்களால் நன்கு புலப்படும்.

"மாரியும் கோடையும்
வார்பனி தூங்கநின்
றேரியு நின்றங்
கிளைக்கின்ற காலத்து
ஆரிய முந்தமி
ழும்முடனே சொல்லிக்
காரிகை யார்க்குக்
கருணை செய்தானே.

அவிழ்க்ககின்ற வாறு
மதுகட்டு மாறுஞ்
சிமிட்டலைப் பட்டுயிர்
போகின்ற வாறும்
தமிழ்ச்சொல் வடசொல்
லெனுமிவ் விரண்டும்
உணர்த்து மவனை
யுணரலு மாமே"

[திருமந்திரம் ஆகமச் சிறப்பு. 9, 10.]

"மாரியும் கோடையும்...." என்னும் மந்திரம் அரிய பெரிய மறை பொருளையுடையது. இச் செய்புளால் கூறப்பட்ட திணையை ஒருவன் பெறுவானாயின் அஃதாவது பஞ்ச பௌதிகங்களாகிய பஞ்சதிணையால் ஆன சரீரம் இச் செய்புளில் கூறிய திணையாக மாற்றமடையப் பெற்றால், அவன் குருவருளால் ஆரியம் தமிழ் என்னும் இரண்டன் இயல்புகளையும் அநுபவமாக உணர வல்லவனாவன் என்பதாம். ஆரியம் தமிழ் என்னும் வியாப்பிய வியாபகங்களுள் பதிபசு பாசம் என்பன அடங்கும். பதி பசு பாசம் என மூன்றாகக் கூறப்படுகின்றனவே எனின், வியாபகமே பசு பாசம் இரண்டையும் உடையது என்க. வியாப்பியம் பதி எனப்படும். வியாப்பியத்தினின்றும் விண்டதே - நிறை பேதத்தால் விரிந்ததே வியாபகமாதலால், அது பங்க முடையது - விஷகுண முடையது எனப்படும். ஆதலால் வியாபகம் அனைத்தும் நஞ்சேயாம். இதுவே நிறை முறையோடு பஞ்சீகரணிக்கப்படின் அமுதமாகும். உடலுயிராகிய பசு பாசங்கள், குருவருளால், நிறைமுறை தழுவி ஒழுகப்படின் "அருளொடு பரா அமுது" ஆகும்; அமுதவடிவாய் நித்தியத்துவம் அடையும் என்பது தத்துவப் பெரியார் துணிபும் வேதமுடிபும் அல்லவா? தமிழ் அமிழ்தம் எனப்படுவதன் உண்மையும் இதுவே. ஒலிவரி வடிவமான பாஷையும் நிறைமுறையோடு கூடிய விடத்துக் கேட்போர் உள்ளத்துச் சென்று உவகையை ஊட்டி அமுதமயமாய் அன்புநெறியை ஆக்கமுறச் செய்தலை நேரே காண்கின்றோம் அல்லவா? தமது உடல் அமுதமயமாக மாற்றமடையப்பெற்ற பெரியார் வாக்குக்கள்—பாடல்கள் எல்லாம் அமுதமயமானவையே. "நிறைமொழிமாந்தர் ஆணையில் கிளந்தமறைமொழி" ஆகிய மந்திரங்கள் அமுதவடிவினவேயாம். "ஞானசம்பந்தன் தமிழ்" "சம்பந்தன் தமிழ்" "தமிழ் ஞான சம்பந்தன்" எனத் திருஞானசம்பந்தர் தேவாரத்தில் பல இடங்களில் கூறப்படுவதும் இவ்வுண்மையை நன்கு புலப்படுத்துதல் கண்டுகொள்க. தமிழர் தென்னர் தொண்டர் அடியவர் என்பன ஒரு பொருட் சொற்கள். ஆரியம் என்னும் எழுதா மறையை அநுபவமாய் அறிந்தவரே- நாத அந்தமாகிய வேத அந்தத்தை அணவியவரே – அடைந்தவரே அந்தணராவர். "அந்தத்தை அணவுவார் அந்தணர். அந்தம் வேத அந்தம் பார்ப்பார் என்பதன் காரணமும் இஃதாமாறு உணர்க" எனக்கலித்தொகை உரையாசிரியர் கூறியதும் அறிக. அந்தணர் பார்ப்பார் ஆரியர் என்பன ஒரு பொருட் சொற்கள். பாசங்கள் பற்றுக்கள் எல்லாம் அற்று எவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டு ஒழுகும் சிவகாருண்ணிய மூர்த்திகளும் இவர்களே யாவர்.

ஆரியம் என்னும் எழுதாமறையானது சற்குரு நாதனாகிய எம்பெருமான் அருள்வழி நின்று வழுவற ஒழுகிப் படியேற்றம் பெற்று வடக்கு—வடதிசை—வடதேசம்—உத்தரதேசம் உத்தர கோசம் எனப்படும் நாத அந்தத்தை அணவிய அந்தணரால் அறியப்படுவது. ஆதலால், "வட மொழி" எனவும் "வடசொல்" எனவும் கூறப்பட்டது. உத்தரம் தஷிணம் வடக்கு தெற்கு என்னும் சித்தர் பரிபாஷைகள் ஆரியம் தமிழ் என்னும் வியாப்பிய வியாபகங்களையே குறித்தனவாகும்.

"...................................
வனம்புகுந்தான் ஊர்
வடக்கென்ப தாமே"

எனவும்,

"தானான வண்ணமும்
கோசமுஞ் சார்தரும்
...................................—........."

எனவும் வரும் திருமந்திரச் செய்யுட்களும் (9—ம் தந். ஞானகுருதரிசனம் செ. 8, 9.) நாதபீடமே வடக்கு-உத்தர கோசம் என்பதை நன்கு புலப்படுத்துதல் கண்டுகொள்க. இந்நிலையை அடையப் பெற்ற தத்துவப் பெரியாரே "வடக்கத்தையார்" எனவும் "உத்தர தேசத்தார்" எனவும் "ஆரியர்" எனவும் மிகப் பழைய காலத்தில் கூறப்பட்டனர். நாதங்களாகிய வேதங்கள் ஒடுங்கிய இடமே-ஒலிகள் எல்லாம் ஒடுங்கிய இடமே நாத அந்தமாகிய வேத அந்தம் ஆகும். அசைவு அற்ற இடம்—

பாசங்கள் பற்றுக்கள் அற்ற இடம்—வேட்கை வேட்கையாகிய அவா அற்ற இடம் இதுவே.

"வேதாந்தம் ஆவது வேட்கைஒழிந்திடம்"

என்பது திருமந்திரம். (1-ம் தந். அந்தணர் ஒழுக்கம் செ. 6.) சீவன் முத்திநிலை இதுவே என்க. இவ்விடத்திற்றான் வாய்மையான சத்துவம் சத்துவமாகிய மௌனம் ஏற்படுவது. உத்தர கோச மங்கை என்னும் இடுகுறித்தலத்தில் ஆராதனை நிகழும் காலத்தில் எவ்வகையான ஓசையும் இன்றி மௌனக்குறி நிகழ்வதாகக் கூறப்படுவதும் இவ்உண்மையையே கருதியதாகும். "வடமொழி" "வடசொல்" என்பனவற்றில் "மொழி" "சொல்" என்பன "எழுதாக்கிளவி" என்பதில் "கிளவி" போல நின்றன. எழுதாமறை என்பதே இவற்றின் பொருளாகும். உலகில் மையமுள் (Compass) வடக்கு நோக்கி நிற்கும் இயற்கை முறையையும் மங்கல கருமம் செய்வார் வடக்கு நோக்கி இருப்பதையும் நோக்குக. அந்தணராகிய வடக்கத்தையாரே மையமுள் எனப்படும் ஞான நேத்திரம் உடையவருமாவர். இதுவேநிறை நிறைகோல் — வியாப்பியஸ்தானம் — ஆரிய பூமி - பதி. வியாப்பியம் வடக்கு எனப்படவே வியாபகம் தெற்கு எனப்பட்டது; தென்புலம் எனப்பட்டது. பாஷையாகிய தமிழும் தென்மொழி—தென்றமிழ் எனப்பட்டது. நிறை என்றால் என்னை? அதுதான் அமலநிறை. அதுதான் மறை. அதுதான்பிறர் அறியாமல்இருப்பது-பரமரகசியப் பொருளாய் இருப்பது.

"நிறை எனப் படுவது
மறை; பிறர் அறியாமை...."

என்பது சங்கச் சான்றோர் வாக்கிய கலித்தொகை. மறை-எழுதாமறை உலகத்தவருக்கு என்றும் மறைபொருளே இம் மறையைக் காண யாரால் முடியும்? இம் மறை எனும் உண்மையைத் தன் குய்யத்துள் மறைத்து யாரையும் மயக்கிவிடுகின்றாள் மாயை என்னும் வாலைப் பெண்ணாகிய ஆத்தாள்.

"தான் என்ற வாலையவள்
உருவங் காணச்
சமர்த் துண்டோ
ஆண்பிள்ளை தானு முண்டோ
.............................. ............"

என்றனர் சித்து மூர்த்தியாகிய கருவூரார். (கருவூரார் – பூஜாவிதி செ.4.)

இவ்எழுதாமறை எங்கே மறைந்து கிடக்கின்றது? என்றால் கடலுள் மறைந்து கிடக்கின்றது என்று கூறப்படும். அக் கடல்தான் எது? நமது சரீரமே கடல் அல்லவா? செவித் துவாரங்கள் அடைபட்ட போது "ஓ" என ஒலிக்கும் ஒலிக்கூட்டம் கடலோசை அல்லவா? குண்டலி சேடசயனன் —"உற்ற ஆக்கையின் உறுபொருள்" ஆகிய சர்ப்பாபரணன் அறிதுயில் கொள்ளும் கடல் – மறையாய் - மறை பொருளாய் இருக்கும் கடல் வேறு எது? கடல் கடைந்து அமுதம் எடுப்பது என்றால் என்னை? அருளமுதமாய் நமது உடலுள் இருக்கும் நவநீத கிருஷ்ணனை – அமுதகடேசனை – அமுத நடேசனைக் காண்பது அடைவது அல்லவா? இவ்வுண்மை அமயம் நேரும்போது விளக்கிக் கூறப்படும்.

"கடலே கடலே யுன்னைக்
கடைந்து கலக்குறுத்து .."

என்னும் நாச்சியார் திரு மொழியில் கடல் எனப்பட்டது உடலே அல்லவா?

"அலைகடல் அதனுளே நின்று
பொருந்தவா கயிலை
[புகுநெறி யிதுகாண்."

(திருவாசகம்-அருட்பத்து செ. 10.)

என்ற மாணிக்கத் திருவாக்கின் பொருள் என்னை? அந்தோ! சரீரமாகிய கடலைக் கைவிட்டு அப்பால் வேறு எங்கோ சென்று அமுதம் பெற முடியுமா? கயிலை காணமுடியுமா? மறையாகிய ஆசான் கடலாகிய உடலுள் மறைந்திருப்பது, மறைக்கப்பட்டு இருப்பது எவ்வாறு? அசுத்த பௌதிக தநுவாகிய அசுரனால் கவரப்பட்டு மறைக்கப்பட்டு இருக்கின்றது என அறிய வேண்டும். இம் மறையைக் காண்பது எப்படி? நமது சரீரமாகிய மால் பிறிதோர் அவதாரம் எடுத்து அசுத்த நிறை என்னும் – காலன் என்னும் அசுரனை அழித்து – வென்று மறையைக் கரையேற்றிக் காண்பிக்க வேண்டும் என்க. இதன் பொருள் என்னை? நமது உடல் சாதகயோகங்களால் அசுத்தம்-அசுத்தமாகிய மலம் – பாசம் நீங்கி அமல மடையப் பெற்றால் வேதங்களை – மறையை – எழுதா மறையை—மறைவடிவான ஆசானைக்கண்டு உய்தியடைய முடியும் என்பதேயாம். வேதங்கள் அசுரன் ஒருவனால் கவரப்பட்டுக் கடலுள் மறைக்கப் பட்டுப் பின் திருமாலால் கரைசேர்க்கப்பட்டன என்னும் புராணக் கற்பனையின் உட் பொருளும் இதுவே என அறிதல் வேண்டும். பின்வரும் திருவாக்குக்கள் மெய்யடியார் விமலதனுவுள் வேதமாகிய ஆசான் காணப்படும் உண்மையை நன்கு புலப்படுத்தும்.

"ஆடிய காலி லசைக்கின்ற வாயுவுந்
தாடித்தெழுந்த தமருக வோசையும்
பாடி யெழுகின்ற வேதாக மங்களு
நாடியி னுள்ளாக நான்கண்ட வாறே."

(திருமந்திரம்–8–ம் தந். நின்மலாவத்தை
[செ.14.)

"உய்யவென் னுள்ளத்து ளோங்கார
[மாய் நின்ற
மெய்யா..............................."

( திருவாசகம் சிவபுராணம் )

"மறையுமாய் மறையின் பொருளுமாய்
[வந்தென்
மனத்திடை மன்னிய மன்னே
இறைவனே நீயென் னுடலிடங் கொண்
[டாய்......"

(ஷிகோயிற்றிருப்பதிகம் செ. 5.)

வேதம் ஆகமம் புராணம் இதிகாசம் முதலிய நூல்கள் எல்லாம், குருவரு

30

# உடம்பின் அருமை பெருமை

[மூன்றும் வாரத் தொடர்ச்சி.]
from Page 23.

அவற்றை அவர்பாடல்களுட் கண்டு தெளிக--அவை பின் வருமாறு;—

## அப்பர் தேவாரம்

செத்தையேன்சிதம்பநாயேன்செடியனே
[னழுக்குப்பாயும்
பொத்தையே போற்றி நாளும் புகலிட
[மறியமாட்டேன்
எத்தை நான் பற்றி நிற்கே னிருளற
[நோக்கமாட்டாக்
கொத்தையேன் செய்வதென்னே கோவல்
[வீரட்டனீரே.

(திருக்கோவல் வீரட்டானம்-திருநேரிசை செ. 1)

மோத்தையைக்கண்ட காக்கை போல
வல்வினைகள் மொய்த்துன்
வார்த்தையைப் பேச லொட்டாமயக்க
[நான் மயங்குகின்றேன்
சீத்தையைச்சிதம் புதன்னைச் செடி கொ
[ளேய் வடிவொன்றில்லா
ஊத்தையைக் கழிக்கும் வண்ணமுணர்வு
[தாவுலகமூர்த்தி

(தனித்—திருநேரிசை செ. 7.)

உடம்பைத் தொலைவித்துன்பாதந்தலை
[வைத்தவுத்தமர்கள்
இடும்பைப்பட ாமலிரங்கு கண்டாயிரு
[ளோடச்செந்தீ
அடும் பொத்தனையவழுன் மழுவாவழலேயு
[மிழும்
படம்பொத்தரவரையா யெம்மை யாளும்
[பசுபதியே

(பசுபதி-திருவிருத்தம் செ. 2).

உடலைத்துறந்துலகேழுங் கடந்துலவாத
[துன்பக்
கடலைக் கடந்துய்யப் போயிடலாகுங்கனக
[வண்ணப்
படலைச் சடைப்பரவைத்திரைக் கங்கைப்
[பனிப்பிறைவெண்
சுடலைப் பொடிக்கடவுட்கடிமை கட்டுணி
[நெஞ்சமே.

(தனித்-திருவிருத்தம் செ. 2.)

வானைக் கடந்தண்டத்தப்பான் மதிப்பன
[மந்திரிப்பார்
ஊனைக்கழித்துய்யக் கொண்டருள் செய்
[வனவுத்தமர்க்கு
ஞானச்சுடாராய் நடுவே யுதிப்பன நங்கை
[யஞ்ச
ஆனையுரித்தன காண்கவ்வயாறனடித்
[தலமே

(திருவையாறு—திருவிருத்தம் செ. 4).

### திருமந்திரம்.

ஆகுமுபாயமே யன்றி யழுக்கற்று
மோக மறச்சுத்த னுதற்கு மூலமே
யாகு மறுவை யழுக்கேற்றி யேற்றல்போ
லாகுவ தெல்லா மருட்பாச மாகுமே.

(பதி பசு பாசவேறின்மை செ. 18.)

"செடியாராக்கை யடியாரைச் ~~சேர்ந்த~~ ~~கற்றார்~~ திருமாலை" என்பது திருவாய்மொழி.

[திருவாசகம் திருச்சதகம்—33, 35, 38, 40, 44, 54, 55, 56, 64, 83, 92, 100. நீத்தல் விண்ணப்பம்-42, 45. செத்திலாப் பத்து—?, 5, 6, அடைக்கலப்பத்து-5. ஆசைப்பத்து1,2, 3,9.பிரார்த்தனைப்பத்து 2, 3, 7, 10. குழைத்தப்பத்து—2, யாத்திரைப்பத்து—4]

சேர்தல் தீர்க்கும்

இச்செடி சேருடலமாகிய அசுத்த நிறையே — அழுக்கே—மாயமே — பாசமே—அஞ்ஞானமாகிய திரையே —மறைப்பே உடம்பிலுள்ள உத்தமனை—உற்றவாக்கையின் உறு பொருளை—ஈசுவரனை - சிவம் எனும் செம்பொருளைத் தரிசனஞ் செய்ய வொட்டாது தடுத்திருப்பது; திரோதானமாய் நிற்கும் நந்தியே—சரீர பாவனையே — பசுத்துவமே சிவசந்நிதானத்தை மறைத்திருப்பது. திருநாளைப் போவார் நாயனாராகிய நந்தனார் நந்தி விலகியபின் சிவதரிசனம் பெற்றனர் என்பதன் உண்மையும் ஈண்டு நோக்கற்பாலது. மேகம் ரவிமதியை மறைத்திருப்பது போல திரோதானமாகிய இருள் சத்தாகிய — மெய்யாகிய சரீரத்துள் விளைந்திருக்கும் ஆசானை மறைத்திருக்கும் இவ் அழுக்காகிய அசுத்த நிறை சுத்த நிறையாகிய உண்மைச் சத்துவத்திற் கலந்து பிரிபடாது இருக்கும். குருநாதன் விதி வழி வழுவின்றி ஒழுகி அஃதாவது தூல சூக்கும கற்பங்களை உண்டு இலட்சியமாகிய ஆராமை என்னும் தேயுவை ஊட்ட ஊட்ட இவ் அசுத்த நிறை என்னும் அழுக்கு சுத்தநிறையினின்றும் விலகி ஒருபால் ஒதுங்கல் பெறும். இலட்சியமே ஞானக்கினியாய் இருந்து அசுத்தமாகிய அஞ்ஞானத்தை விலகச்செய்த போது அங்கு ஆசான் தரிசனம் உளதாகும். ஆரூரும் இதுவே. இத்தன்மைவாய்க்கப்பெற்ற வித்தகரே திருவாரூர் பிறந்தாராவர். இம்மெய்ம்மையாளருக்கே தாம் அடியவர் என்பாராய்த் "திருவாரூர்ப் பிறந்தார்கள் எல்லார்க்கும் அடியேன்" எனப் புகழ்ந்து போற்றினர் "பொய்ம்மையாளரைப் பாடாதே" என ஆணை தந்த நமது சைவசமய பரமாசாரியர் தம்பிரான்றோழர் என அறிக.

(தொடரும்.)

ளால், எழுதாமறையை மறைவடிவாகிய இறைவனை அடைந்து உய்தியடைய வேண்டும் என்னும் உண்மையையே பலவகையான கற்பனைகளால் கூறுவனவாகும். அமயம் நேரும்தோறும் இவ் வுண்மைகள் மேலும் விளக்கிக் கூறப்படும்.

இதுகாறும் கூறியவைகளால் எழுதாமறை இன்னது என்பதும் இறைவன் வடிவமாகிய அம்மறை—வேதம் ஒலிவரிவடிவமான பாஷைகளில் வழங்குதல் அசம்பாவிதம் என்பதும் ஆரியம் தமிழ் என்னும் வியாப்பிய வியாபகங்களின் உண்மையும் வேத நூல்கள் என உலகில் வழங்குவன எழுதுமறைகளே என்பதும் தூலம் அமலமடைந்தால் எழுதாமறையை அறியலாம் என்பதும் பிறவும் ஒருவாறு உணரத்தகும்.

—.—

# தலையாய அறம்

[மூன்றும் வாரத் தொடர்ச்சி]

காய்தல் உவத்தல் அகற்றி உண்மை உணர்வார்ப்பெறின், உலகியல் நோக்கிய இன்னோரன்ன உரைகளால் உளவாகும் ஏதப்பாடுயாதும் இன்றென்பது திண்ணம்.

"தென்புலத்தார்" என்பதனால் ஒருவகையான தெய்வங்களைத்தான் ("கடவுட்சாதி") தெய்வத்தைத்தான் தேவர் கருதினாராயின், அவர் மீண்டும் அப்பொருளே பயக்கும் "தெய்வம்" என்னும் சொல்லைத் திட்பநுட்பஞ் செறிந்த தமது குறட்பாவில் அத் "தென்புலத்தார்" என்னும் சொல்லின் பின் வழங்கவேண்டிய அவசியம் யாதும் இல்லை. மற்று, பிதுரர் என்பதன் உண்மைப் பொருள்தான் யாதோ? எனின், பிதுரர் என்பது அநாதியாய் உள்ள சஞ்சிதம் என்றே கூறுதல் வேண்டும். பிதுர்களைத் திருப்தி செய்யுமாறு—இச் சஞ்சிதத்தை ஒழிக்குமாறு பிதுர்க்கடன் ஆற்றுங்கால், அஃதாவது புரோகிதன் என்னும் ஆசான் விதிக்கும் விதிகளைக் கைக்கொண்டு ஒழுகி வரவர, பிதுரர் என்னும் சஞ்சிதம், சஞ்சிதம் என்னும் மலம் மலம்என்னும் இருவினை, இருவினை என்னும் உடலுயிர் தனக்கமைந்த காலன் என்னும் அசுத்த நிறையினின்றும் நீங்கி அமலநிறை என்னும் சுத்த நிறையைப் பெறும். பிதுர்க்களைத் திருப்தி செய்தல் என்பதன் உட்பொருள் இதுவேயாம் என அறிக. அசுத்தநிறை, சஞ்சிதம், பிதுர், காலன் என்பன ஒன்றேயாம். வீடுபேற்றை அடைவான் முயலும் ஒருவன் பிறவிகட்கெல்லாம் வித்தாயிருக்கும் சஞ்சிதத்தையும் அதன் காரியமாகிய தெய்வம் விருந்து ஒக்கல் என்னும் முன்னிலைகளையும் உறவுபடுத்தல் வேண்டும்—வெல்லுதல் வேண்டும்—தன்னிலை யாக்கல் வேண்டும் என்பது. ஏனெனில், தன்னிலை முன்னிலை ஒன்றாகாதொழியின் உய்தியில்லை என்பதும் தன்னிலையே முன்னிலை என்பதும் தத்துவப் பெரியார் துணிபும் வேத முடிபுமாதலால் என்க. தன்னிலை முன்னிலை ஒன்றாகாதொழியின் ஒருவன் தன்னைத் தான் அறிவதில்லை என்பது திண்ணம். பின்வரும் பிரபல சுருதிகள் தன்னிலையே முன்னிலை என்பதனை நன்கு வலியுறுத்துதல் கண்டு கொள்க.

"தாமே தமக்குச் சுற்றமுந் தாமே தமக்கு
விதிவகையும்......"
(திருவாசகம் யாத்திரைப்பத்து. செ. 1.)

தானலா துலக மில்லை சகமலா தடிமை
யில்லை......"
(அப்பர் தேவாரம் திருவையாறு திருநேரிசை. செ. 1.)

தாமே தமக்கிகலுற வெனத் தேர்ந்து
மேன்மேற் கிளர்வொடு செந்நெறி படர்மின்
என்னே அறிவன் துணை காலாடினே"
(இடைக்காடர் அருளிப மூவடிமுப்பது. சூத். 26.)

"தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்
கலென்றாங்
கைம்புலத்தாறோம் பறலை"

என்னும் தேவர்வாக்கின் உண்மைப்பொருள் ஒரு சிறிது விளக்கமுற உரைக்கப்படும்.

தென்புலத்தார்—பிதுரர் என்னும் சஞ்சிதமும், தெய்வம்—(சஞ்சிதம் என்னும் வித்துக் கூட்டங்களில், எந்த வித்து அநுபவமாதற்குப் பக்குவப்பட்டதோ, அந்த வித்துக்கு ஏற்ப ஆக்கமுற்ற உடலுயிர், அந்த வித்து என்னும் வினைகளாலாகிய பலனை அநுபவிக்க வேண்டியனவாதலால், அவ்வாறு அமைந்த அவ்வினை என்னும்) தெய்வமும், விருந்து—(அவ்வினைக்கீடாக அமையப்பெற்ற) அருந்தல் என்னும் உணவும், ஒக்கல்—(அதன் காரியமாகிய) பொருந்தல் என்னும் போகமும் சுற்றமும், தான் என்று—தன்னை ஒழிய வேறில்லை என்று (ஒருவன் உணர்ந்து), ஆங்கு—(உணர்ந்த) அப்பொழுதே, தலை—(அவன் செய்யவேண்டிய) தலையாய அறம் (எது எனின்) ஐம்புலத்து ஆறு ஓம்பல்—ஐம்புல நெறிகளை வழுவாது காத்து ஒழுகுதலேயாம் என்பது.

தென்புலத்தார்:— சீவர்களுக்குப் பிறப்பு இறப்பு என்பனவற்றை வருவிப்பது இருவினையின் காரணமாகிய சஞ்சிதமாதலின் அதுவே பிதுரர் என்னும் தென்புலத்தார் எனப்பட்டது. "ஊசலாட்டும் இவ் உடலுயிராயின இருவினை" (திருவாசகம்) என்பன சஞ்சிதத்தின் காரியமாகலின் அச்சஞ்சிதமும் "தான்" என்பதில் அடங்கிற்று. தென்புலத்தார், சஞ்சிதம், யமபடர், காலன் அசுத்தநிறை, பாசம், மாயை, அத்தியாரோபம், கிரந்தி என்பன ஒன்றேயாகலின், அத்தென்புலக்

தான் வியாபகமாகிய இப்பிரபஞ்சமேயல்லாது தென்படும் புலமாகிய—இடமாகிய முன்னிலையே யல்லாது வேறு என்னை? முன்னிலையாகிய வியாபகம் வியாப்பியமாகிய கௌண நிலையினின்றும்—காரணத்தினின்றும் விண்டதாதலின்—நிறைபேதத்தால் விரிந்ததாதலின் பங்கமுடையது—குற்றமுடையது--விஷம குணமுடையது விஷகுண முடையது என்று கூறப்படும். விஷமம் என்றால் ஏற்றிழிவு என்பர். அஃதாவது ஏற்றம் இறக்கம் உடையது என்பர். ஏற்றம் இறக்கம் நிறை பேதம் எனப்படும். இம்முன்னிலை என்னும் ஆலகாலமாகிய நஞ்சு பூதபஞ்சீகரணத்தின் வேறாகுமா? முன்னிலைகளுள் ஒன்றாகிய தூல சரீரமும் பூதபஞ்சீகரணத்தால் ஆக்கப்பட்டதேயன்றி வேறாகுமா? ஆதலால் நமது சரீரமும் ஆலமே என்பது வெள்ளிடை. இந்த விஷத்தை மாற்றுவதே--ஆலத்தை அமுதமாக்குவதே உண்மை நிலையடையும் பக்குவ சீவர்க்குரிய சாதகயோகம் என்பது சொல்லாமலே அமையும்.

(தொடரும்)

---

## "வித்தகம்" பெற்ற மதிப்புரை.

"வித்தகம்" என்னும் நாமம் புனைந்த புதிய வார வெளியீட்டின் முதல் வெளியீடு புதுவையிலிருந்து வரப்பெற்றோம். இஃது திருநந்திதேவரின் திருவருளை முன்னிட்டு, அரிய பெரிய நோக்கங்களோடு வெளிவரும் ஓர் சிறந்த பத்திரிகையாகும். இப்பத்திரிகையை வாசிப்போர் "நந்தியெம்பெருமான் புதுவையில்உலகுய்யுமாறு அருண்மாரியாய்ப் பொழிந்த வேத உண்மைகளையும், மணிவாசகர் முதலிய வித்தகச்சித்தர் பெருமக்கள் அருளிய ஒப்புயர்வில்லாத் திப்பிய பிரபல சுருதியாகிய திருவாசகம் முதலிய திருமுறைகளையும் அடிப்படையாகக் கொண்டு உடலும் உயிரும் ஒழிவற ஒன்றிச் சிவாங்கமாதலாகிய உண்மைச் சைவ முத்தியை உணர்த்துகின்ற பழைய உண்மைச் சைவக் கொள்கையாகிய இயற்கை

நெறியின் உண்மை விளக்கங்களை அறியும் பாக்கியத்தைப் பெறுவர். உடலைவிட்டு உயிர் பிரிதலாகிய மரணமும் முத்திநிலை என்று கொள்ளும் கொள்கையும் சைவ சமயப் பழைய கொள்கைகளுக்கு முழு விரோதமானதென்பதும் இப்பத்திரிகையின் நோக்கமாகும்.”

அரசினர் ஆசிரிய கல்லூரித் தமிழ்ப் பண்டிதராக இருந்தவரும், தமிழ்க் கலா விநோதரும், தமிழ்ப் புலவரும், வசனரூபமாக நூல்கள் வியாசங்கள் முதலியன இயற்றுவதில் அதிசமர்த்தருமாகிய தென்கோவை திரு. ச. கந்தைய பிள்ளை அவர்களே இப்பத்திரிகையின் ஆசிரியராக விளங்குகின்றாராகையால், இது நாளடைவில் மேலும் மேலும் சிறந்தோங்கும் என எதிர்பார்க்கின்றேம்.

[ஈழகேசரி, கன்னாகம் யாழ்பாணம்.]

புதுவை நகரிலிருந்து வியாழக்கிழமைதோறும்வெளிவரும் இப்பெயரிய செந்தமிழ்ப் பத்திரிகையொன்று நமக்குக் கிடைத்தது. இதன் ஆசிரியர் யாழ்ப்பாணம் தென்கோவை தமிழ்ப் பண்டிதர். ச. கந்தையா பிள்ளை அவர்களாவர்.

இதிலே சித்தாந்த விஷயங்களும் அரசியல் விஷயங்களும், புதின விஷயங்களும் அடங்கியிருக்கின்றன.

[The Jaffna Native Opinion]

(தேசநாட்டியம்)

வயாவிளான், யாழ்ப்பாணம்.

அண்டரண்ட சராசரங்களனைத்தையும் ஆக்கியளித் தழிக்கும் எல்லாம் வல்ல சத்தியாகிய உலக மாதாவின் திருவருட் பிரசாதத்தை அடைவான் பன்னெடுங்காலம் கடுந்தவம் உஞற்றும் ஸ்ரீலஸ்ரீ அரவிந்த மஹரிஷியின் ஆஸ்ரமத்தில் சிலகாலமாக வதியும் பெற்றியுடையாரும், தமிழ் நாட்டின் அபிவிருத்திக்கே அநவரதம் உழைப்பவரும், மௌன யோகத்தை முழு வைராக்கியத்துடன் சாதிப்பவருமான அந்தண குல திலகம் ஸ்ரீலஸ்ரீ சுத்தாநந்த பாரதியார் அவர்களின் அபிப்பிராயம் பின்வருமாறு:—

“வாரத் தாள் மிகவும் நன்றாயிருக்கிறது தமிழர் சமயம் பொதுநிலைச் சைவம். அதன் உலகளாவிய உண்மையையெடுத்து விளக்க முன்வந்த

## புதுவையில்
## புயல் காற்றும் மழையும்

14—12—33 வியாழக்கிழமை இரவு பிற்பாகத்தில் வாயுபகவானும் வருணபகவானும் இப்புதுவையில் தாண்டவமாட ஆரம்பஞ் செய்தனர். வெள்ளிக்கிழமை (15—12—33) உதயகாலம் இருவருக்கும் போட்டிப் பந்தயம் ஏற்பட்டது. வாயுபகவானுக்கு சீற்றம் உண்டானது. சிறுகச் சிறுக அவர் வல்லபத்தைக் காட்டத் தொடங்கி பகல் முழுமையும் வருணனோடு கைக்கலந்து குஸ்தி பழகினர். “எருது வருத்தம் காகத்துக்கு எப்படித் தெரியும்” என்ற பழமொழிக்கிணங்க இவர்கள் போட்டிப் பந்தயத்தால் புதுவையிலும் சுற்றுப்புர கிராமங்களிலும் உள்ள தாவர வர்க்கங்களுக்கும், கட்டிடங்கட்கும் பலத்த சேதங்கள் உண்டானது. வெள்ளிக்கிழமை இரவு வாயுபகவான் தன் வல்லமையை அதிகமாய் காட்ட ஆரம்பித்தார்—பரிதாபம்! பரிதாபம்!! சமுத்திரராஜன் வாயுபகவானால் உந்தப்பட்டவராய் அதிக உக்கிரத்தோடு தன்னுடைய அலைகளாகிய சேனைகளை புதுவை, கீரைப்பாளையம், துய்புய்பேட்டை, குரிசுகுப்பம் இன்னும் பல இடங்களுக்கும் ஏவி

வித்தகம் தமிழருக்குச் சிறந்த கடவுட்டொண்டாற்றியதாகும். முப்பொருளுண்மையும், அன்பு பெருகி அருட்கலப்பால் அறிவு விளங்கி யின்பப் பொருளான இறைவனுடன் கூடி கண்ணும், கதிரும் கதிரோனும் போன்று இணைபிரியாது அவனில் வாழும் அரிய வழியைக்காட்டும் சுத்த சித்தாந்த முத்தி நெறியை வித்தகம் தமிழர் வாழ்வில் வித்துமாக” பத்திரிகை நடை நன்கு.

குறிப்பு: மேற்கண்ட அபிப்பிராயங்களை மனமுவந்துஎமக்கனுப்பிய பெரியார்களின் ஆசியைப் பூரணமாகப் பெற்றஎமது ‘வித்தகம்” இத்தமிழுலகில்தனது ஏற்றபெற்றி வியாபகத்தால் மிளிர்வதோடு ஏனைய பெரியார்களின் கருணை நோக்குக் கிலக்காகி நிலவுமென்ப தோருதலை. ஆதலால் எமது மனமார்ந்த வந்தனம் அப்பெரியார்கட்கு என்றும் உரிமையாகற்பால்தேயாம். (ப—ர்)

## தொடையில் கருதரித்த ஸ்திரி.

8—12—33-யில் முனி என்ற 30 வயது ஸ்திரி ஒரு விபத்துக்காளாகி ஜெனரல் ஆஸ்பத்திரிக்கு கொண்டுவரப்பட்டாள். அவளுக்குச் சிகிச்சை செய்த டாக்டர் அந்த ஸ்திரீயின் வலது தொடையில் ஒரு வீக்கம் இருப்பதைக் கண்டு அதைப்பற்றி ஆராய்ந்தார். அவர் அங்கு கரு இருப்பதாகச் சந்தேகித்தார். இது ஒரு நூதனமாக விருந்ததால் அவர் உடனே உயர்தர அதிகாரிகளுக்கு இதைப்பற்றி அறிவிக்க, ஜெனரல் ஆஸ்பத்திரி பிரசவ இலாக்கா தலைவர் டாக்டர் அகில சர்க்கார், இதைக் கவனித்து எக்ஸ்ரேமூலம் பரிசோதனை செய்து பார்த்தார். அங்கு கரு இருப்பது நன்றாகத் தெரிந்தது. ஆனால் அந்தக் கருவுக்கு உயிர் போய்விட்டிருப்பதாக நிபுணர்கள் அபிப்பிராயப் படுகின்றனர்.

ஆங்காங்கு பெருஞ் சேதங்களை விளைவித்ததைக் காணும் ஒவ்வொருவரும் மனம் கசிந்து, வசிக்க இடமில்லாது தவிக்கும் ஜனங்களைப் பார்த்து கண்ணீர் விடாமல் இருக்க முடியவில்லை. கடலில் கட்டப்பட்டிருக்கும் (Pier) பீர் என்னும் பாலம் பழுதடைந்துவிட்டது, கொடிமரத்தில் கொடி ஏற்றம் செய்ய இடமில்லை, இவ்வூரிற் சில நாளாக தங்கி யிருக்கும் தேவாஸ் மஹாராஜாவின் கொடிமரமும் முறியடிக்கப்பட்டது. வெள்ளிக்கிழமை இரவு ஜனங்கள் பட்ட கஷ்டங்களுக்களவில்லை. சனிக்கிழமை காலை சுமார் நாலு மணிக்கு மன்மதனுடைய ரதம் என்று புராணிகர்களால் கூறப்படும் தென்றல் காற்று வீச ஆரம்பித்த உடன்வாயு, வருணன், சமுத்திரராஜன் இம்மூவரும் அத்தென்றலின் பரிசத்தால் தங்கள் அசைவுகளை ஒடுக்கி ஊர் ஜனங்களுக்கு சிறிது ஆறுதல் அளித்தனர். சேதங்களும் அதிகம். திருடர்கள் விளையாட்டும் அதிகம் என்று கூறப்படுகிறது.

“வித்தகம்”
சந்தா விபரம்.

| வருட சந்தா | முன் பணம் |
| --- | --- |
| இந்தியா, பர்மா, சிலோன் | ரூ. 3-0-0 |
| மலாயா, சிங்கபூர், சைகோன் | ரூ. 4-0-0 |

வித்தக நிலையம், புதுச்சேரி.

Sandhanam Printing Works, Pondicherry.

Le Gérant R. Nagarattinam.